செ.வெ.எண்: 143 நாள்: 23.02.2020

**திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புனரமைக்கப்பட்ட தலைமையக விற்பனை நிலையத்தினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்**

தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புனரமைக்கப்பட்ட புதுப்பொலிவுடன் கூடிய தலைமையக விற்பனை நிலையத்தினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் தலைமையில் இன்று(23.02.2020) துவக்கி வைத்தார். கைத்தறி மற்றும் துணிநூல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.பிரதீப் யாதவ் இஆப., அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குனர் திரு.கருணாகரன் இஆப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கம் உலகளவில் புகழ் பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறது. அனைத்து சமுதாய மக்களும் சங்கமிக்கும் இடமாக திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கம் உள்ளது. திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கம் அனைத்து தரப்பு மக்களின் நம்பிக்கைக்கும், பாராட்டுதலுக்கும் உரிய ராசியுள்ள நிறுவனமாகும். புதுப்பொலிவு பெற்றுள்ள திருபுவனம் பட்டு கைத்தறி கூட்டுறவு சங்கம் மேலும் வளர்ச்சியடைந்து புகழ்பெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

தஞ்சாவூர் மண்டலத்திற்கு மரியாதையையும், கௌரவமும் சேர்க்கின்ற வகையில் திருபுவனம் பட்டு நெசவுத்தொழில் விளங்கி வருகிறது. இந்திய அளவில் பட்டுத் தொழிலில் திருபுவனம் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. நெசவுத்தொழில் மிகவும் தொன்மையான ஒரு மூத்த தொழிலாகும். நெசவுத்தொழில் என்பது மிகவும் கவனத்துடன் செய்யக்கூடிய ஒரு நுட்பமான தொழிலாகும். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர், அம்மா ஆகியோரின் வழியில் கைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை 750 யூனிட்களாகவும் உயர்த்திக் கொடுத்தார். நெசவாளர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மின்சாரத்திற்கு சுமார் 375 கோடி ரூபாயை அரசே ஏற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கைத்தறி ஆதரவு திட்டம் என்ற திட்டத்தை ரூபாய் 40 கோடியில் செயல்படுத்தி வருகிறார். தள்ளுபடி மானியத்தை 80 கோடியிலிருந்து 150 கோடியாக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆவார். திருபுவனம் பட்டு தலைமுறைகளைக் கடந்து நிலைக்கக்கூடிய தரமான பட்டாகும். பொதுமக்கள் என்றென்றும் நெசவுத் தொழிலுக்கு துணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் ஆறு பயனாளிக்கும், தேசிய அஞ்சலக சேமிப்பு புத்தகத் திட்டத்தின் கீழ் 11 பயனாளிக்கும், பாஸ் புத்தகம்(கச்சாத்து) வழங்கும் திட்டத்தின் கீழ் ஆறு பயனாளிக்கும், முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஐந்து பயனாளிகளுக்கும், குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இரண்டு பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா் திரு.ஆர்.கே.பாரதிமோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ராம.ராமநாதன், திருவிடைமருதூர் நிலவள வங்கித் தலைவர் திரு.ஏ.வி.கே.அசோக் குமார், கும்பகோணம் நிலவள வங்கித் தலைவர் திரு.சோழபுரம் அறிவழகன், ஜவுளி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.கே.ஜே.லெனின், திருபுவனம் சோழன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.செல்வராஜ், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.தியாகராஜன், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க இணை இயக்குனர் திரு.மகாலிங்கம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குனர் திரு.ராசேந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், தஞ்சாவூா்.